

Vol.29 | No. 8|August 2025
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## AUGUST 15
## THE ASSUMPTION OF MOTHER MARY





23-07-2025

Reception to Mar Jose Thekkumcherikunnel



15-07-2025

Junior priests ongoing formation Sagamam



10-07-2025

Minor Seminary Academic Year Inauguration at Mukkoottukal

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 29 NO :8 AUGUST 2025



# இறையருள்
# IRAIARUL

உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 08 |
| மிஷன்லீக் இயக்கம் | 09 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 10 |
| இல்வாழ்வு இயக்கம் | 12 |
| வின்சென்ட்-தே-பவுல் சபை | 13 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 14 |
| உறவிய மலர் | 17 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 17 |
| நல்வாழ்வு இயக்கம் | 18 |
| மறைமாவட்ட செய்திகள் | 19 |
| மறைவட்ட செய்திகள் | 23 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 32 |
| MONTHLY AGENDA - AUGUST 2025 | 33 |
| BISHOP'S ENGAGEMENTS - AUGUST 2025 | 36 |



## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Thomas Kuzhikodil**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**

**Mr. S.M.Edwinson**

**Mr. Iyathurai**



Published by:

**Fr. Thomas Kuzhikodil**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Mary Jency V.M**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/172/2025**

**Dear Readers,** **31 July 2025**

Greetings and Prayerful wishes from Bishop's House, Thuckalay!

As we navigate the sacred calling of our priestly ministry, I write to you today to reflect upon the profound relationship between our priesthood and the maternal love of the Blessed Virgin Mary. In her, we find not only the Mother of our Saviour but also our own spiritual mother, who watches over us with tender care and guides us in our sacred duties.

## Our Blessed Mother: Queen and Protectress of Priests

The title "Queen of Priests" given to Our Lady finds its deepest meaning in her special relationship with Christ, the eternal High Priest. At the foot of the Cross, when Jesus entrusted John to Mary with the words "Behold, your mother" (John 19:27), He was not merely caring for His mother's earthly needs. Instead, He was establishing Mary as the spiritual mother of all who would share in His priesthood throughout the ages.

Mary's queenship over priests is not one of dominion but of maternal care. She who pondered all things in her heart (Luke 2:19) understands the weight of priestly duty. She who stood faithfully beneath the Cross knows the sacrifices demanded of those who serve in persona Christi. Her crown is woven not with jewels but with prayers for her priest-sons, and her sceptre is the rosary she uses to intercede for us before the throne of grace.

In the Upper Room, Mary was present with the apostles as they awaited the coming of the Holy Spirit (Acts 1:14). This presence was not coincidental but providential, for she who had received the Spirit at the Annunciation now assisted at the birth of the priestly

Church. Today, she continues this maternal ministry, breathing spiritual life into our priesthood through her constant intercession.

**Mary Protects Her Priest-Sons**

The protection that Our Blessed Mother offers to her priests is both spiritual and practical, covering every aspect of our ministerial life. Like a mother watching over her children, Mary anticipates our needs and intercedes for us with her powerful advocacy.

Spiritual Protection: Mary shields us from the snares of the evil one, who seeks especially to ensnare those who serve at the altar. She who crushed the serpent's head (Genesis 3:15) continues this victory in the lives of her priest-sons. When temptations attack us, when discouragement weighs heavily on our hearts, and when the burden of ministry feels overwhelming, Mary's maternal presence offers comfort and strength. She enfolds us in her mantle of protection, just as tradition tells us she protected Juan Diego at Guadalupe.

Intercession for Vocations: Mary prayerfully intercedes for priestly vocations, presenting to her Son the needs of His Church for worthy ministers. She who said, "Do whatever He tells you" (John 2:5) at Cana continues to inspire young men to respond generously to Christ's call to the priesthood. Through her intercession, hearts are opened to receive the grace of vocation.

Preservation in Holiness: Our Lady, the Immaculate Conception, desires that her priest-sons reflect her purity and holiness. She assists us in upholding the sacred commitments of our ordination, particularly our promise of celibacy. Like a mother who helps her child grow in virtue, Mary shapes us in the likeness of her Son, teaching us His gentleness, His compassion, and His total dedication to the Father's will.

Protection from Scandal: In these times when the priesthood faces particular scrutiny and attack, Mary serves as our advocate and defender. She who is terrible as an army set in battle array (Song of Songs 6:10) fights for the honour of her priest-sons. When we

are falsely accused or when our ministry is questioned, we can take refuge in her Immaculate Heart, knowing that she who defended her Son will defend those who serve in His name.

### Cultivating Tender Devotion to Our Lady

Dear Fathers, our relationship with Mary must not remain merely intellectual or ceremonial. It must be characterised by the tender devotion of a son for his mother. This devotion springs from recognising Mary's unique role in our priestly life and responding with filial love and trust.

Daily Consecration: Each morning, as we begin our priestly duties, let us renew our consecration to Mary. Following the example of St Louis de Montfort, we entrust all our prayers, works, joys, and sufferings to her, asking her to present them to Jesus with her own merits. This act of consecration transforms our entire day into an offering made through Mary's hands.

The Holy Rosary: The rosary should be our constant companion, the breviary of our Marian devotion. Through the mysteries of the rosary, we contemplate the life of Christ through Mary's eyes. As we pray the rosary daily, we unite our voices with hers in praising God and interceding for the needs of our people. Let the rosary beads be worn smooth by our frequent use, a testament to our faithful devotion.

Marian Antiphons: The Church's ancient practice of singing Marian antiphons provides us with beautiful prayers to honour Our Lady throughout the liturgical year. Whether we chant the "Alma Redemptoris Mater" during Advent and Christmas, the "Ave Regina Caelorum" during Lent, or the "Regina Caeli" during Easter, these prayers should flow naturally from our lips as expressions of our love for Mary.

Personal Prayer and Conversation: Beyond formal prayers, we must cultivate a personal relationship with Mary, speaking to her as a son speaks to his mother. Share with her your joys and sorrows, your

hopes and fears, your successes and failures in ministry. She who treasured all things in her heart will receive your confidences with maternal love and respond with wise counsel.

Visits to Marian Shrines: When possible, undertake pilgrimages to Marian shrines within our region. These sacred places, blessed by Mary's presence and miracles, provide special opportunities to deepen our devotion and receive her maternal blessing on our priesthood.

## Spreading Marian Devotion Among the Faithful

Our love for Mary must not remain hidden but should overflow into our pastoral ministry, inspiring the faithful entrusted to our care to develop their own tender devotion to the Mother of God. We are called to be apostles of Mary, spreading her message of love, conversion, and hope.

Preaching and Teaching: In our homilies and catechetical instruction, we must often speak of Mary's role in salvation history and her ongoing maternal care for the Church. Help the faithful understand that devotion to Mary is not optional for Catholics but a vital part of our faith. Teach them that Mary always leads us to Jesus, never away from Him.

Liturgical Celebrations: Ensure that Marian feasts are observed with fitting solemnity in our parishes. The major feasts of the Annunciation, the Assumption, and the Immaculate Conception should be times of joy and devotion for our communities. Promote participation in Marian devotions such as the May crowning, October rosary devotions, and First Saturday observances.

Family Consecration: Promote the consecration of families to the Immaculate Heart of Mary. Visit homes during May to bless family altars dedicated to Our Lady. Encourage parents to lead the family rosary, fostering a home that becomes a domestic church where Mary's presence is felt and honoured.

Youth Formation: Pay special attention to nurturing young people

in Marian devotion. Establish youth groups dedicated to Our Lady, organise pilgrimages to Marian shrines, and encourage young people to wear the brown scapular and the miraculous medal as signs of their consecration to Mary. Remember that many priestly and religious vocations originate from early Marian devotion.

Care for the Suffering: Following Mary's example of compassion, encourage devotion to Our Lady of Sorrows among those who suffer. Visit hospitals and homes of the sick, bringing images of Mary and leading prayers for her intercession. Show how Mary's own sufferings at the foot of the Cross unite her intimately with all human pain.

Social Justice and Mary: Present Mary as the model of Christian social concern, she who sang the Magnificat, proclaiming God's preferential love for the poor and humble. Help the faithful recognise that true Marian devotion involves caring for those on the margins and committing to justice, following Mary's example of serving others.

**Our Lady's Promises**

Beloved Fathers, as we deepen our devotion to Our Blessed Mother and encourage this devotion among our people, let us remember the promises she has made to those who honour her. At Fatima, she promised that her Immaculate Heart would be our refuge and the path that leads us to God. She assured us that those who wear her scapular will not suffer eternal fire, and that those who pray her rosary will receive great graces.

These promises are especially true for us, her priest-sons. Mary's protection is not just a pious feeling but a spiritual reality we can depend on. In times of trial, discouragement, opposition, or misunderstanding, we can confidently turn to our heavenly Mother, knowing she will not abandon those she has spiritually adopted.

Fortunately, in August, we celebrate the solemnity of the Assumption of our Blessed Mother. The mystery of Mary's Assumption—her bodily ascent into heaven—reveals not only the glory of her destiny

but also the fullness of her maternal authority over all the Church, and in a special way, over us who share in the priesthood of her Son. From her throne in heaven, crowned as Queen of Angels and Saints, she exercises her royal right as protector and guide of priests worldwide. Her Assumption assures us that our faithful service, united with her intercession, will lead us to share in the glory she now enjoys.

Similarly, we observe the feast of the Queenship of Mary, celebrated on 22 August, which honours the Blessed Virgin Mary as Queen of Heaven and Earth. It recognises her unique role in salvation history as the Mother of Christ the King. This feast highlights Mary's intercessory power and maternal care for all believers, including priests who look to her as a model of perfect surrender to God's will and faithful service. Priests often turn to Mary, Queen of Heaven, for guidance in their pastoral ministry, drawing inspiration from her "yes" to God's plan and her presence at the foot of the cross, seeing in her both a spiritual mother who intercedes for their priestly vocation and an example of complete devotion to Christ.

Let us, therefore, renew our commitment to live as true sons of Mary, allowing her maternal love to shape us into priests after the heart of her Son. May our lives be so filled with Marian devotion that all who meet us are drawn to love and honour the Mother of God! Through our example and teaching, may our parishes become centres of genuine Marian spirituality, places where Mary's presence is felt and her intercession is sought.

I entrust this letter and all of you, my dear brother priests, to the loving care of Our Lady, Queen of Priests. May she bless your ministry abundantly and draw you ever closer to the Sacred Heart of her divine Son!

† George Rajendran SDB
Bishop of Thuckalay

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

**கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை லூக் *1.37***



குழந்தை ஈசோ இயக்கக் குழந்தைகளுக்கு ஜூலை மாதச் செயல்பாடு வண்ணம் தீட்டுதல் போட்டி (Logo). மறைமாவட்ட அளவில் குழந்தை ஈசோ இயக்கத்தைச் சார்ந்த அனைத்து குழந்தைகளும் பங்கெடுத்தார்கள். ஒவ்வொரு பங்குகளிலும் போட்டிகள் நடத்தப்பட்டது.

**இயக்குநர்**
**அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில்**

| FEASTDAYS OF REV. FATHERS - AUGUST 2025 | |
|---|---|
| FR. ANIL RAJ DOMINIC | 08 |
| FR. DOMINIC MUNDATT MCBS | 08 |
| FR. TOBIN ALAPURACKAL | 28 |
| FR. ANOOP THATHAPPALLY | 28 |

சிறுமலர்
MISSION LEAGUE

# மிஷன் லீக் இயக்கம்

## வருடாந்தர பொதுக்குழு கூடுகை

2025 ஜூலை 20, மதியம் 2.00 மணியளவில் சிறுமலர் மிஷன்லீக் இயக்க மறைமாவட்ட மிஷன்லீக் இயக்க தலைவர் திரு. அஜு தோமஸ் அவர்கள் தலைமையில் மேதகு ஆயர் அவர்கள் முன்னிலையில் கூடுகை நடைபெற்றது. முதலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் ஒவ்வொரு மறைவட்டமாக அமர்ந்திருந்தவர்கள் தங்களை அறிமுகம் செய்து, ஒவ்வொரு பங்களவிலும் அவர்களின் செயல்பாடுகள் குறித்து பகிர்ந்து அளித்ததோடு, மறைவட்ட அளவில் மிஷன்லீக் இயக்க வளர்ச்சிக்கு என்னென்ன செய்யலாம் என்று கலந்தாலோசித்து சிறப்பித்தனர். பின் மறை மாவட்ட இயக்குனர் அருட்தந்தை பிரிண்டோகுரியாஸ் அவர்கள் ஒரு வருட மிஷன்லீக் இயக்க செயல்பாடுகள் (2025-26) குறித்து விளக்கி கூறினார்கள். அதன் பின் கூட்ட நிகழ்வுகள் ஆரம்பமானது. தேசிய அமைப்பாளர் திரு. ஞானதாஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்க, சிறப்பு விருந்தினர்கள் ஒளி ஏற்றி சிறப்பிக்க, தங்கள் பங்கில் சிறுமலர் மிஷன்லீக் இயக்க செயல்பாடுகளை சூசைபுரம் பங்கு மாணவர்கள் பகிர்ந்து அளித்தனர். பின் மேதகு ஆயர் அவர்கள் வாழ்த்துரை வழங்கி ஆசி வழங்கினார்கள். ஆயர் அவர்கள் பேசும்போது, "நற்செய்தி அறிவியுங்கள், இடைவிடாது ஜெபியுங்கள்" என்ற இறை வார்த்தையை மையமாக்கி, நன்மை செய்யும் ஒரு சூழலை நாம் உருவாக்கி, குருக்கள் துறவிகள் இவர்களுக்காக ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம். பிறரன்புப் பணி செய்யவும் நற்செய்தி பணியாற்றவும் தனக்கு கிடைத்த வாய்ப்பை, அனுபவத்தை எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை பற்றி கூறி மாணவர்களை நற்செய்தி பணிக்கு அழைப்பு விடுத்து, விசுவாசத்திற்கு சான்று பகிர்ந்து, கிறிஸ்துவை அதிகமாக அறிந்து, சிறந்த மிஷனரி ஆக வாழ கேட்டு ஆசியுரை வழங்கினார்கள். அதன்பின் இறுதியாக திருமதி. லதா குமாரி (தேசிய துணை தலைவர்) அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற மிஷன் கீதத்துடன் விழா இனிது நிறைவு பெற்றது.

**இயக்குனர்**
**அருட்தந்தை பிரின்டோ குரியாஸ்**

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### பயிற்சி வகுப்புகளை வழிநடத்திய இளையோர்கள்



சென்னை பூந்தமல்லி, திரு இருதய உயர்குருமடத்தில் திருத்தொண்டர்களுக்கு நடத்தப்பட்ட 5 நாள் சிறப்பு பயிற்சி முகாமில், ஒருநாள் பயிற்சி வகுப்புகளை தக்கலை மறைமாவட்ட இளையோர் இயக்க நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் வழிநடத்தினர். 2025 ஜூலை 11, வெள்ளிக்கிழமை அன்று, காலை 09.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மனோஜ், அஞ்சனா மற்றும் மெரின் சுஜித் ஆகியோர் பயிற்சி வகுப்புகளை வழிநடத்தினர். தக்கலை மறைமாவட்டத்தில் நடைபெற்று வருகின்ற இளையோர் பணிகளை பற்றியும், அதில் வருகின்ற சவால்கள், தற்போதைய இளையோர்களின் மனநிலை குறித்த கேள்விகளுக்கு பதில்களும், உரையாடல்களும் நடைபெற்றன. மேலும், அன்றைய நாள் மதியம் 2.00 மணியளவில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த நான்கு மறைமாவட்டங்களின் அருட்சகோதரர்கள் இணைந்து சிறப்பு சந்திப்பு நிகழ்வுகளும் நடத்தப்பட்டது. இதற்குரிய ஏற்பாடுகளை அருள்முனைவர் ஜோசப் சந்தோஷ் செய்திருந்தார்.

### நடுவண் செயற்குழு கூட்டம்

ஜூலை 06, ஞாயிற்றுகிழமை மதியம் 02.00 மணியளவில் நடுவண் செயற்குழு கூட்டம் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை அனில்ராஜ் தலைமையில் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் புனித

அல்போன்சா நடைபயணம் எவ்வாறு நடத்த வேண்டும் என்று கலந்துரையாடப்பட்டது. தொடர்ந்து அனைத்து அலகுகளிலும் தேர்தல் நடத்தி பொறுப்பாளர்கள் விவரங்களை SMYM அலுவலகத்தில் ஆகஸ்ட் 17 ஆம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இறுதியாக இயக்குநர் தந்தையின் ஆசியுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**புனித அல்போன்சா நடைபயணம்**

புனித அல்போன்சா திருவிழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு ஆண்டும் மறைமாவட்டத்தின் SMYM வழிகாட்டுதலின் கீழ் நாகர்கோவில் புனித அல்போன்சா ஆலயத்திற்கு நடைபயணம் மேற்கொள்ளப்படும். இந்த ஆண்டு ஜூலை 26 , சனிக்கிழமை காலை 6:30 மணிக்கு தக்கலை ஆயர் இல்லம் மற்றும் அம்மாண்டிவிளை பகுதிகளிலிருந்து திருப்பயணம் ஆரம்பமானது. காலையில் அனைவருக்கும் ஆயர் இல்லம் மற்றும் மணவாளகுறிச்சியில் வைத்து காலை உணவு வழங்கப்பட்டது. பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பரம்பில் அவர்கள் செபம் செய்து பயணத்தை தொடங்கி வைத்தார். இளையோர் இயக்க இயக்குநர் தந்தை, அருட்தந்தையர்கள், இளையோர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் ஆகியோர் இணைந்து திருத்தலம் நோக்கி நடந்தனர். நடைபயணமாக குளச்சல் சாலையிலிருந்து மற்றொரு குழுவாக சூசைபுரம் மறைவட்ட இளையோர்கள் மற்றும் இறைமக்களும் திருத்தலம் நோக்கி நடந்தனர். சூசைபுரம் மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் மோன் அவர்கள் நவநாளை வழிநடத்தினார், அதைத் தொடர்ந்து மறைமாவட்ட இளையோர் இயக்க இயக்குனர் அருட்தந்தை அனில் ராஜ் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. பின்னர் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த புனிதப் பயணத்தில் இளையோர் மற்றும் நம்பிக்கையாளர்கள் சுமார் 750 பேர் கலந்து கொண்டனர்.

**செயலர்,**
**செல்வி ஜினோ**




## திருமண ஆயத்த வகுப்புகள்

உறவுகள் இல்லாமல் மனித வாழ்வு மலராது அர்த்தமும் பெறாது உண்மையான ஆழமான அன்புறவால் தான் குடும்பங்கள் கட்டி எழுப்பப்படுகின்றன. இந்த குடும்பங்கள்தாம் சமூக அன்பின் அடித்தளமாக அமைந்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குகின்றன. இதேபோல் திருச்சபை என்கிற கிறிஸ்தவ விசுவாசம் சமூகத்திற்கும் குடும்பங்களுக்கும் ஆணிவேரும் அடித்தளமும் ஆகும். நல்ல குடும்பங்களை உருவாக்காமல் திருச்சபை வளர முடியாது. எனவே அதனை உருவாக்குவது திருச்சபையின் தலையாயப் பணியாகும். இதன் அடிப்படையில் திருமண வாழ்வுக்குத் தங்களையே தயாரிக்கும்



இளையோருக்கு திருமண ஆயத்த வகுப்புகள் ஜூலை 11,12 ஆகிய நாட்களில் இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இவ்வகுப்பானது பல அருட்தந்தையர்கள் மற்றும் ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் பலர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***




# வின்சென்ட்-தே-பவுல் சபை

## தக்கலை மத்தியப் பேரவையின் 28-வது ஆண்டு விழா

2025 ஜூலை 20, மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயத்தில் காலை 9 மணிக்கு அருட்தந்தை மகேஷ் அவர்களின் திருப்பலியோடு ஆண்டு விழா துவங்கப்பட்டது. ஆண்டு விழா நிகழ்வுகள் 11 மணியளவில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களின் தலைமையில் குத்துவிளக்கேற்றி துவங்கப்பட்டது. கூட்டத்தில் தக்கலை மத்தியப் பேரவையின் தலைவர் சகோ. றாபி அவர்கள் வரவேற்புரை கூற, மத்தியப் பேரவை செயலர் சகோ. சோனிக்ரீகன் ஆண்டறிக்கை வாசித்தார். தமிழக மண்டல ஒருங்கிணைப்புக் குழுவின் மேனாள் ஒருங்கிணைப்பாளர் சகோ. வெள்ளதுரை, கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர். அருட்தந்தை மகேஷ் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். பின்னர் வின்சென்டியன் பணியில் 25, மற்றும் 40 வருட நிறைவு பெற்ற வின்சென்டியர்களை பாராட்டி ஆயர் அவர்களால் நினைவு பரிசும் வழங்கப்பட்டது. மேலும் விழாவினை மெருகூட்டும் விதமாக இடையிடையே வின்சென்டியர்களால் கலைநிகழ்சிகளும் நடத்தப்பட்டது. இறுதியாக திட்ட அலுவலர் சகோ. எட்வின்சன் நன்றி கூற ஆண்டு விழா இனிதே முடிவடைந்தது.

*சகோ. D.Pஷாஜி*
*தகவல் தொடர்பு அலுவலர்*

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

CTWWC (Changing the Way We Care) திட்டத்தின் கீழ், சூசைபுரம் கிராமத்தில் 2025 ஜூலை 25ஆம் தேதி சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்காக ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நிகழ்வின் நோக்கம், சமூகத்தில் பெண்களின் பங்கு மற்றும் குடும்ப உறவுகளில் அவர்களின் முக்கியத்துவம், குழந்தைகள் பாதுகாப்பின் தேவை ஆகியவற்றை வலியுறுத்துவதாகும். இவ் விழிப்புணர்வு நிகழ்ச்சியில்; SHG அமைப்புகள் பெண்களின் வாழ்க்கையை எவ்வாறு மேம்படுத்துகின்றன, அவற்றின் மூலம் குடும்பத்தின் நிதி நிலைத்தன்மை, சமூக ஒற்றுமை, மற்றும் பெண்கள் சக்திவாய்ந்தவர்களாக எப்படி உருவாகின்றனர் என்பதைப் பற்றியும் கூறப்பட்டது. இதில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டு குழுவாக இணைந்து செயல்படும் போது குடும்பத்திலும் சமூகத்திலும் ஏற்படும் நேர்மறையான மாற்றங்களை குறித்தும் கூறினார்கள். விழிப்புணர்வு நிகழ்வு, SHG உறுப்பினர்களில் நம்பிக்கை, ஒற்றுமை மற்றும் சமூக நலத்திற்கு உதவுவதாக அமைந்தது.

## கேட்கீப்பிங் பயிற்சிகள்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் CTWWC குழு, ஜூலை மாதம், பாலப்பள்ளம் (ஜூலை 20), மற்றும் சீனிவிளை (ஜூலை 27) ஆகிய இடங்களில் பங்குப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் பங்கு உறுப்பினர்களுக்காக "கேட்கீப்பிங்" பயிற்சிகள் நடத்தப்பட்டது. இந்த பயிற்சிகள், பின்தங்கிய நிலைகளில் உள்ள குழந்தைகளை பாதுகாக்கவும், பராமரிக்கவும், சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டது.

இந்த பயிற்சிகளில் தங்கள் அனுபவங்களை பகிரந்து கொண்டது மட்டுமல்லாமல், பங்கு உறுப்பினர்கள் உதவி தேவைப்படும்.

குடும்பங்களை எவ்வாறு அடையாளம் காண்பது என்பதையும் தேவையான சேவைகளை அவர்களுடன் இணைப்பது எப்படி என்பதையும் கற்றனர். மேலும் தங்களது சமூகத்தில் குழந்தைகளை பாதுகாக்கும் செயல்முறையை செயல்படுத்துவதாகவும் கூறினார்கள்.

அடுத்த கட்டமாக, இந்த பணியை தொடர்ந்து செயல்படுத்த, CTWWC குழுவுடன் இணைந்து. பங்குகளில் குழந்தைகள் பாதுகாப்பு குழுக்களை உருவாக்கி ஒவ்வொரு குழந்தையும் அவரது குடும்பத்தால் மட்டுமல்லாமல், பங்கு சமூகத்தால் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் அனைவரும் செயல்படுவோம் என்று கூறினார்கள்.

## FY25 மூன்றாவது மீளாய்வு கூட்ட அறிக்கை

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் Changing the Way We Care (CTWWC) செயல் திட்டத்தின் FY25 (2024-25) நிதியாண்டுக்கான மூன்றாவது மீளாய்வு கூட்டம் ஜூலை 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் அழகியமண்டபத்தில் நடைபெற்றது. இந்த கூட்டம் திட்டத்தின் வளர்ச்சிக்கும், அடுத்த ஆண்டுக்கான செயல்திட்டங்களை திட்டமிடுவதற்கான வழியாக அமைந்தது.

இக்கூட்டத்தை கத்தோலிக்க நிவாரண சேவை (CRS) திட்ட ஒருங்கிணைப்பாளர் செல்வி சஞ்சனா மற்றும் CRS ஆலோசகர் அருட்தந்தை செலஸ்டின் ஆகியோர் இணைந்து ஒருங்கிணைத்தனர். கூட்டத்தின் முதல்நாளில், FY25இல் செயல்படுத்தப்பட்ட முக்கிய திட்டங்கள். திட்ட செயல்பாடுகள், முயற்சிகள் மற்றும் சவால்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இரண்டாம் நாளில், FY26இல் திட்டத்தை எவ்வாறு பரப்பி செயல்படுத்தலாம். தற்போதைய செயல்பாடுகளில் இருந்து எடுக்க வேண்டிய பாடங்கள் என்ன, அடுத்த கட்ட நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான செயல்திட்டங்கள் குறித்து குழுவினருடன் குழு வாரியாக கலந்துரையாடல் நடைபெற்றது. அருட்தந்தை செபஸ்டின் மற்றும் செல்வி சஞ்சனா இருவரும், அனைத்து குழுக்களிடமும் நேரடியாக கலந்துரையாடி, FY26க்கான திட்டங்களை உருவாக்குவதில் உறுப்பினர்களின் பங்களிப்பை உறுதி செய்தனர். திட்டக் குழுவினர் தங்களின் அனுபவங்களை பகிர்ந்துகொண்டு அடுத்த ஆண்டின் வளர்ச்சிக்கான செயல் திட்டங்களை கூறினார்கள். குழுக்களின்

ஒத்துழைப்பு மற்றும் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து, திட்டத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கான அடித்தளத்தை இக்கூட்டம் உருவாக்கியது.

## பணியாளர்கள் நோக்கம், செயல்பாடு

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் ஊழியர்களுக்கான ஒரு சிந்தனை அமர்வு ஜூலை 05, கல்லுவிளையில் உள்ள KKSSS ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது. இந்த அமர்வுக்கு அருட்தந்தை. ஜோசப் சந்தோஷ் தலைமை தாங்கினார். இந்த அமர்வு மனித வாழ்க்கையின் நோக்கம், நாம் எந்த திசையில் செல்கிறோம். நமது தனிப்பட்ட மற்றும் தொழில்முறை பயணங்களில் நாம் எவ்வாறு முன்னேற வேண்டும் என்பதில் கவனம் செலுத்தியது. இந்த கருப்பொருள்கள் குறித்து பல நுண்ணறிவு பார்வைகள் கொள்ளப்பட்டன.

## அமர்வின் முக்கிய சிறப்பம்சங்கள்

நமது அன்றாட வாழ்வில், பல்வேறு நிகழ்வுகள் மற்றும் கவனச்சிதறல்களால் நாம் பெரும்பாலும் இயக்கப்படுகிறோம் என்பதை பேச்சாளர் வலியுறுத்தினார். அவற்றை கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதற்குப் பதிலாக, அந்த இடையூறுகளைக் கட்டுப்படுத்தவும், கவனம் செலுத்தவும், நமது திட்டமிட்ட பாதையில் நடக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நமது உண்மையான இலக்கை அடைய முடியும்.

ஊழியர்கள் தங்கள் கடமைகளை நேர்மையுடன் நிறைவேற்றவும், தங்களை அணுகும் பயனாளிகளிடம் அன்பு மற்றும் அக்கறையைக் காட்டவும் ஊக்குவிக்கப்பட்டனர். அனைவருடனும் இணக்கமான உறவுகளைப் பேணுவதன் முக்கியத்துவத்தையும், தனக்கு மட்டும் அக்கறை காட்டாமல், மற்றவர்களின் நல்வாழ்விற்கும் அதை விரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார். அருட்தந்தை முனைவர். ஜோசப் சந்தோஷ் இந்த எண்ணங்களை திறம்பட வெளிப்படுத்தினார். அனைத்து ஊழியர்களும் தங்கள் பாத்திரங்களில் எவ்வாறு பிரதிபலிக்க வேண்டும் மற்றும் செயல்பட வேண்டும் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள உதவினார்.

***செயலர்***

***அருட்தந்தை மகேஷ்,***

# உறவிய மலர்

## அரைநாள் தியானம்

2025 ஜூலை 21 ஞாயிற்றுக்கிழமை, மறைமாவட்ட அளவிலான உறவியம் சார்பாக நடைபெறும் கிறிஸ்து யூபிலி கொண்டாட்டத்தின் ஆயத்தமாக மறைமாவட்டத்திலுள்ள அனைத்து உறவியப் பணியாளர்களுக்கும் மறைவட்டம் வாரியாக அரைநாள் தியானம் மற்றும் கருத்தரங்கு நடந்து வருகிறது. இதன் முதல் தியானமானது ஜூலை 12 காலை 9.30 மணிமுதல் மதியம் 1.30 மணி வரை மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயத்தில் வைத்து களியல் மற்றும் மஞ்சாலுமூடு மறைவட்ட உறவிய பணியாளர்களுக்காக நடைபெற்றது. இதில் 115 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். இரண்டாவது தியானம் ஜூலை 19 சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை நித்திரவிளை தூய ஜெயமாதா மறைவட்ட ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மொத்தம் 85 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். காலை 9.15 மணிக்கு வருகைப் பதிவு, 9.30 மணிக்கு செபமாலை, 10 மணிக்கு துவக்க விழா தொடர்ந்து இறைப்புகழ்ச்சி, தியானவுரை, நற்கருணை ஆராதனை மற்றும் வகுப்புகளும் நடைப்பெற்றது.

# அருட்சகோதரர்களிடமிருந்து

**"ஆண்டவர் என்னைத் தம் அன்பனாகத் தேர்ந்தெடுத்துள்ளார்". (திபா 4:3)**

ஜூலை மாதம் 3 ஆம் தேதி நமது சீரோ மலபார் திருஅவை தினம், திருத்தூதர் தூய தோமையார் நினைவு தினம் ஆகியவை உயர் குருமடங்கள் அனைத்திலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. குன்நோத் உயர்மடத்தில் பயிலும் திருதொண்டர் பிபின் அவர்களின் தாத்தா மரணடைந்தார். அன்னாரின் ஆன்மா இளைப்பாறுதலுக்காக அருட்சகோதர்கள் வேண்டினார்கள்.

*இப்படிக்கு*
*அருட்சகோ. திவின் ராஜ் & டெபின்*

# நல்வாழ்வு இயக்கம்

## உலக தாத்தா பாட்டிகள் தினம்

தாத்தா பாட்டி தினம், திருச்சபைகளில் பொதுவாக ஜூலை மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது. போப் பிரான்சிஸ் இந்த நாளை, "உலக தாத்தா பாட்டி மற்றும் முதியோர் தினம்" என்று அறிவித்தார். இந்த நாளினை சிறப்பிக்கும் விதமாக தக்கலை மறைமாவட்ட நலப்பணிக்குழு மற்றும் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் இணைந்து உலக தாத்தா பாட்டிகள் தினம் ஜீலை 19-ம் தேதி K.K.S.S.S அரங்கத்தில் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட நலப்பணிக்குழு மற்றும் K.K.S.S.S இயக்குநர் தந்தை மகேஷ் ஆன்றணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இயக்குநர் தந்தை அவர்கள் தலைமையுரையாற்றும் போது குடும்ப விழுமியங்களை வளர்ப்பதிலும், வழிகாட்டுதலை வழங்குவதிலும், நம்பிக்கை மற்றும் மரபுகளைப் பரப்புவதிலும் தாத்தா பாட்டியின் நீடித்த செல்வாக்கை வலியுறுத்தினார். குடும்பங்கள் மற்றும் திருச்சபை சமூகத்தில்; பலத்தின் தூண்களாக அவர்களின் தியாகங்கள், ஞானம் மற்றும் நிலையான இருப்பு பற்றியும், சிறப்பு விருந்தினராக எழுத்தாளரும் பேச்சளருமான குமரி ஆதவன் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்தி பேசும் போது; தனது பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டிகளால் வளர்க்கப்படும் ஒருவர், இரு மடங்கு அனுபவம், இரு மடங்கு பாசம், இரு மடங்கு வேடிக்கை, இரு மடங்கு மதிப்புகள் மற்றும் ஆதரவால் ஆழமாக வளப்படுத்தப்படுகிறார். தாத்தா பாட்டி தங்கள் மிகவும் அன்பான குழந்தைகளின் குழந்தைகளிடமிருந்து சிறந்ததை வெளிப்படுத்துகிறார்கள். அவர்களின் இருப்பு அவர்களின் பேரக்குழந்தைகளின் வாழ்க்கையில் சூரியனின் இருப்பைப் போன்றது. நான் கூறுவது என்னவென்றால், தாத்தா பாட்டி இருப்பது ஒரு பாக்கியமாக இருக்கும் குடும்பங்கள் உள்ளன. அவர்கள் தாத்தா பாட்டி தங்கள் சொந்த ஊரில் வசிக்கலாம் அல்லது குடும்பம் வெளிநாட்டில் சிறந்த வாய்ப்புகளுக்காகச் சென்று தாத்தா பாட்டி இல்லாத காரணத்தால் இருக்கலாம். பெரியவர்கள் அன்பாகவும் நன்றாகவும் பராமரிக்கப்படும் ஒரு வீட்டில், கடவுள் தானே வாழ்கிறார் என்று கூறினார். Educare திட்டத்தை சேர்ந்த மாணவர்கள் இசை, நடனம் மற்றும் பாடல் உள்ளிட்ட வண்ணமயமான நிகழ்ச்சிகளுடன் நிகழ்விற்கு ஆற்றலையும் மகிழ்ச்சியையும் கொண்டு வந்தனர். நிகழ்ச்சி மதியம் உணவோடு நிறைவுற்றது. சுமார் 80 மூத்த குடிமக்கள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# மறைமாவட்டச் செய்திகள்

## காக்கநாட்டில் உள்ள புனித தோமையார் மலையில் சபை கொண்டாட்டம்

2025 ஜூலை 3 ஆம் தேதி சீரோ மலபார் சபாதினமாக அனுசரிக்கப்பட்டது. அன்றைய தினம், துக்ரனா திருநாள் காக்கநாட்டில் உள்ள செயின்ட் தாமஸ் மலையில் கொண்டாடப்பட்டது. சீரோ-மலபார் திருச்சபையின் ஒவ்வொரு மறைமாவட்டத்தின் உறுப்பினர்களும் பங்கேற்றனர். நமது மறைமாவட்டத்திலிருந்து அருட்பணி. சுபின் புத்தன்புரக்கல், அருட்சகோதரி எமிலி CMC, அருட்சகோதரி ஜெய்ஸி FCC, அருட்சகோதரி ஜியோ மரியா SABS, அருட்சகோதரி டெஸ்ஸா மரியா SH, திரு கிளிண்டன் (கிள்ளியூர்) மற்றும் திருமதி லதா (நித்திரவிளை) ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். ராசா திருப்பலியைத் தொடர்ந்து, உயர் பேராயர் மார் ரபேல் தட்டில் அவர்கள் பொதுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

## இளங்குருமடத்தில் கல்வியாண்டு துவக்கம்

ஜூலை 10, காலை 11:00 மணியளவில் முக்கூட்டுகலில் உள்ள புனித மேரி இளங்குருமடத்தில் புதிய கல்வியாண்டின் தொடக்க விழா நடைபெற்றது. இளங்குருமடத்தின் முதல்வர் அருட்பணி. பாபி கொச்சுப்பரம்பில் MST, அவர்கள் அனைவரையும் வரவேற்று, குரு மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் திருச்சபையின் அனைத்து இடத்திலும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதை எடுத்துரைத்தார். ஆயர் அவர்கள் தொடக்க விழாவிற்கு தலைமை தாங்கினார்.

## அருட்சகோதரி மேரி ஜோசப் OMMI அவர்களுக்கு இறுதி மரியாதை

2025 ஜூலை 14, அன்று அருட்சகோதரி மேரி ஜோசப் OMMI (87) அவர்கள் இறைவனடி சேர்ந்தார். 28 ஆண்டுகளுக்கும் மேலாக கன்னியாகுமரி மிஷனுக்கும், பின்னர் தக்கலை மறைமாவட்டத்திற்கும் மறைபரப்புபணியாற்றினார். 1970 ஆம் ஆண்டு முதல் பல்வேறு இடங்களில் மறைபரப்புபணியாற்றினார். அவற்றில்

பின்வருவன அடங்கும்.திரு இருதய மறைபரப்புத்தளம் படந்தாலுமூடு (1970 முதல்) புனித ஜார்ஜ் மறைபரப்புத்தளம் முஞ்சிறை (1971) புனித பால் மறைபரப்புத்தளம், தெற்றியோடு (1972) புனித மரியா கொரற்றி மறைபரப்புத்தளம் அதங்கோடு (1980)புனித குழந்தை தெரசாள் மறைபரப்புத்தளம் புளியறை (1997-1999), படந்தாலுமூடு தொடக்கப்பள்ளியில் முதல் தலைமை ஆசிரியையாக (7 ஆண்டுகள்) மற்றும் திரு இருதய மேல்நிலை பள்ளி படந்தாலுமூடு ஆசிரியையாக (12 ஆண்டுகள்) பணியாற்றினார். மேலும் கன்னியாகுமரி மறைபரப்புத்தளத்தின் கீழ் ஏராளமான தாய் சேய் சுகாதார மையங்களிலும் பணியாற்றினார். இவரது இறுதிச் சடங்கு ஜூலை 15, செவ்வாய்க்கிழமை, காலை 10:00 விமலா மாதா அருட்சகோதரி இல்ல ஆலயம், OMMI, சங்கனாச்சேரியில் நடைபெற்றது. சங்கனாச்சேரி பேராலய கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி ஆறுதல் கூறினார்.

## இளம் அருட்தந்தையர்களுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி

2025 ஜூலை 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் சங்கமத்தில், இளம் அருட்தந்தையர்களுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. அருட்தந்தையர்கள் ஜோஸ் பால் புரையிடத்துக்குன்னல், ஆண்டனி மகேஷ், ஜார்ஜ் கண்டத்தில், பிரின்ஸ் செரிப்பநாட்டு, அஜின் சி. ஜோசப், லிஜு மராட்டுக்கலம், லிண்டோ தகிடியேல், சஞ்சோ தேனாப்ளாக்கல், அமன்டோ எடக்கூட்டத்தில், சுனில் ஆண்டனி மற்றும் அனூப் தத்தப்பள்ளி ஆகியோர் கலந்து கொண்டனர். பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பரம்பில் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். முதல் நாள், காலையில், மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் ஆய்வாளரான அருட்தந்தை தேவதாஸ், அவர்கள் குருத்துவ வாழ்வு மற்றும் அர்பணிப்பு வாழ்வு குறித்து இரண்டு அமர்வுகளை நடத்தினார். பிற்பகல், பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் அவர்கள் நியமன பரிமாணங்கள் குறித்த அமர்வுக்கு தலைமை தாங்கினார், அதைத் தொடர்ந்து ஆலய கணக்கு வழக்குகள் தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கு பேரருட்தந்தை சுபின் புத்தன்புரக்கல் அவர்கள் பதிலளித்தார். மாலையில், ஆயர் தலைமையில்

கியூரியாவின் உறுப்பினர்கள் மற்றும் இளம் அருட்தந்தையர்களுடன் பொது விவாதம் நடைபெற்றது. ஜூலை 16, குழித்துறை மறைமாவட்டத்தைச் சேர்ந்த நாஞ்சில் கல்லூரியின் தாளாளர் பேரருட்தந்தை ஸ்டீபன் அவர்கள், குருத்துவ வாழ்வு மற்றும் பணியில் உளவியல்-பாலியல் ஒருங்கிணைப்பு குறித்த இரண்டு நுண்ணறிவுள்ள அமர்வுகளை வழிநடத்தினார்.

## அருட்தந்தையர் பேரவை கூட்டம்

2025 ஜூலை 25, அருட்தந்தையர் பேரவையின் மூன்றாவது பொதுக்குழு கூட்டம் சங்கமத்தில் காலை 10:15 மணிக்கு தொடங்கியது. செயலர் அருட்தந்தை. ஜோஷி குளத்தும்கல் தலைமையில் குழு விவாதம் நடைபெற்றது.

## அருட்தந்தையர் பேரவையின் புதிய உறுப்பினர்கள்

மே 24 முதல் நடைமுறைக்கு வந்த இடமாற்றங்களைத் தொடர்ந்து, பின்வரும் அருட்தந்தையர்கள் தற்போதைய அருட்தந்தையர் பேரவையின் உறுப்பினர்களாக இல்லை. சிலர் அதிகாரபூர்வ உறுப்பினர்களாக இருந்ததாலும், அந்தந்த அலுவலகங்களில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டவுடன் தங்கள் உறுப்பினர்களாக தொடர்வதில் இந்த மாற்றம் ஏற்பட்டது.

அருட்தந்தை ஜான்சிலால் அரக்கபரம்பில், அருட்தந்தை தாமஸ் சத்தியநேசன், அருட்தந்தை ஜோசப் சந்தோஷ், அருட்தந்தை சாஜன் நெட்டபொங்கு, அருட்தந்தை சுபின் புத்தன்புரக்கல், அருட்தந்தை ராபின் கூருமுள்ளில், அருட்தந்தை மார்ட்டின் கண்டம்பரம்பில் எம்எஸ்டி. ஆகியோர் மேற்படி பொறுப்பிலிருந்து நீக்கம் பெற்றனர்.

அவர்களுக்குப் பதிலாக, அருட்தந்தையர் பேரவையின் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அருட்தந்தை சுபின் புத்தன்புரக்கல், அருட்தந்தை பாபி கொச்சுபரம்பில் எம்எஸ்டி, அருட்தந்தை தாமஸ் கோயிப்புரம், அருட்தந்தை டோஜி பரம்பில்பரம்பில், அருட்தந்தை ஷிஜோ ஜோஸ் ஐக்கரகுனெல், அருட்தந்தை றோபின்ஸ் மற்றும் அருட்தந்தை ஆண்டனி மகேஷ்.

# மறைவட்டச் செய்திகள்

## தக்கலை பிலாங்காலை

### புனித சூசையப்பர் ஆலயம் தடிக்காரன்கோணம்

புனித அல்போன்சா திருவிழா மற்றும் நவநாள் திருப்பலி நடைபெற்றது. மறைமாவட்ட அளவில் புனித அல்போன்சா திருத்தலம் நோக்கிய இளைஞர்கள் சார்பில் நடைபெற்ற நடைபயணத்தில் மறைக்கல்வி மாணவர்கள் கலந்து கொண்டனர். சிறுமலர் மிஷன்லீக் இயக்கத்தின் சார்பில் மறைமாவட்ட அளவில் நடைபெற்ற பொதுமன்றத்தில் மாணவர்கள் கலந்து கொண்டனர். அருட்சகோதரிகள் அனைத்து பங்குமக்களின் வீடுகளுக்கு சென்று ஜெபித்து வீடு சந்திப்பு நடத்தினர். முதல் வெள்ளி திருப்பலி மற்றும் ஆராதனை நடைபெற்றது. துக்ரான திருநாள் கொண்டாடப்பட்டது. 25 ம் தேதி தக்கலை பிலாங்காலை மறைவட்ட தந்தையர்கள் இணைந்து புனித அல்போன்சா திருத்தலத்தில் திருப்பலி நிறைவேற்றினர்.

### புனித அன்னை தெரசா ஆலயம்,கல்லுவிளை



ஜூலை 3 ஆம் நாள் புனித தேமையார் திருநாள் கொண்டாடப்பட்டது. ஆடம்பரத்திருப்பலிக்கு பின்பு மறைக்கல்வி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் அன்பு விருந்து நடைபெற்றது. ஜூலை 16-ம் நாள் கார்மல் மாதா திருநாள் கொண்டாடப்பட்டது. கார்மல் மாதா மற்றும் புனித சைமன் ஸ்டோக் வேடமிட்ட குழந்தைகளின் நிகழ்சிகள் மற்றும் திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து அருட்சகோதரிகளுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. ஜீலை 27-ம் தேதி முதியோர்களை சிறப்பு செய்யும் வகையில், தாத்தா பாட்டி தினம் கொண்டாடப்பட்டது. திருப்பலிக்கு பின்பு அருட்தந்தை அவர்கள் அனைத்து

முதியோர்களுக்கும் பொன்னாடை போர்த்தி வாழ்த்தி பேசினார். குழந்தைகள் மலர் கொத்து வழங்கி மகிழ்ந்தனர். இறுதியாக கேக் வெட்டப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டது.

## ▶ புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

ஜூலை 3 ஆம் நாள் புனித தேமையார் திருநாள் கொண்டாடப்பட்டது. 4 ஆம் தேதி மாலை 6 மணிக்கு திருப்பலி மற்றும் முதல் வெள்ளி ஆராதனை நடைபெற்றது. 6 ஆம் தேதி திருவிழாவை முன்னிட்டு உள்ள பொதுமன்றம் நடைபெற்றது. மறைவட்ட அளவில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்ற



குழந்தை ஈசோ இயக்க குழந்தைகளுக்கு ஆலயத்தில் பரிசுகள் வழங்கப்பட்டது. 12 ஆம் தேதி ஆலயத்தில் நோயாளிகளுக்கான திருப்பலி மற்றும் ஆராதனை தைலம் பூசுதல் திருச்சடங்கு மற்றும் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. 13 ஆம் தேதி வின்சென்ட் தே பவுல் ஆண்கள் கிளைச்சபை சார்பாக ஏழைகளுக்கு உதவ உணவுத் திருவிழா நடத்தப்பட்டது. 19 ஆம் தேதி மாலை 6 மணிக்கு திருப்பலி மற்றும் புனித அல்போன்சா நவநாள் தொடங்கியது. 20 ஆம் தேதி தாத்தா பாட்டி தினம் கொண்டாடப்பட்டது. அருட்தந்தை ஆல்பட் ஜோஸ் தாத்தா பாட்டிகளுக்கு சிறப்பு வகுப்பு நடத்தினார். இறுதியில் அனைவருக்கும் தேநீர் வழங்கி ஜெபமாலை வழங்கப்பட்டது. மறைக்கல்வியில் முதல் இலக்கிய மன்ற விழா நடைபெற்றது. 26 ஆம் தேதி புனித அல்போன்சா திருத்தலம் நோக்கிய நடைபயணத்தில் பங்குமக்கள் கலந்து கொண்டனர். 27 ஆம் தேதி அருட்தந்தை ஆல்பட் ஜோஸ் தந்தை அவர்களுக்கும் பங்குதந்தைக்கும் பிறந்தநாள் வாழ்த்துக்கள் கூறப்பட்டது. ஆலயத்தில் வைத்து இரு தந்தையர்களும் கேக் வெட்டி வாழ்த்து தெரிவித்தனர். 28 ஆம் தேதி புனித அல்போன்சா திருவிழா அன்று மாலை 6 மணிக்கு திருப்பலி மற்றும் அருட்சகோதரிகள் இல்லம் வரை பவனியாக சென்று ஆலயத்தில் திரும்பி வந்து புனித அல்போன்சா திருப்பண்டம் முத்தம் செய்து நேர்ச்சை வழங்கப்பட்டது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அந்தந்த வாரம் பிறந்தநாள் மற்றும் திருமணநாள் கொண்டாடுபவர்களுக்காக திருப்பலியில் ஜெபித்து ஆசிர் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்து பரிசுகள் வழங்கப்படுகிறது.

### புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை

ஜூலை 3 ஆம் நாள் புனித தோமையார் திருநாள் கொண்டாடப்பட்டது. புனித அல்போன்சா திருநாள் கொண்டாடப்பட்டது.

### புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் காட்டாதுறை

புனித அல்போன்சா திருநாளை கொண்டாடும் விதத்தில் ஒன்பது நாள்கள் திருப்பலியும் நவநாள் வேண்டல்களும் நடைபெற்றன. ஜூலை 28, புனித அல்போன்சா திருவிழா திருப்பலியும் ஒன்பதாம் நாள் நவநாள் வேண்டுதலும் சிறப்புப்பவனியும் நடைபெற்றது.

## களியல் மறைவட்டம்

### புனித தோமையார் ஆலயம், மாறப்பாடி

பங்கு குடும்ப விழா ஜூலை 2 முதல் 7 வரை நடைபெற்றது. ஜூலை 2 புதன்கிழமை, பங்குத்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்களால் கொடியேற்றப்பட்டது. ஜூன் 29, 30 மற்றும் ஜூலை 1 ஆகிய நாட்களில் அருட்தந்தை குலசை பெலிக்ஸ் மற்றும் குழுவினர் தலைமையில் நற்செய்திப் பெருவிழா நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் செபமாலை, நவநாள் மற்றும் திருப்பலியும் நடைபெற்றது. திருவிழா நாட்களில் 7 குழந்தைகளுக்கு திருமுழுக்கும் 8 சிறுவர் சிறுமிகளுக்கு முதல் திருவிருந்தும் வழங்கப்பட்டது. இரண்டு நாட்களாக பக்த இயக்கங்கள் மற்றும் மறைக்கல்வி ஆண்டுவிழா கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. திருப்பவனி, இராசா திருப்பலி மற்றும் அன்பின் விருந்தும் வழங்கப்பட்டது. ஜூலை 12 சனிக்கிழமை மஞ்சாலுமூடு மறைவட்ட ஆலயத்தில் வைத்து நடைபெற்ற உறவிய பொறுப்பாளர்களுக்கான தியானத்தில் பங்கிலிருந்து 12 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். ஜூலை 20 அருட்சகோதரி மெஸ்ஸிமரியா அவர்கள் தலைமையில் ஐந்து உறுப்பினர்கள் கொண்டு பங்களவிலான நலவாழ்வுப் பணிக்குழு தொடங்கப்பட்டது. மறைமாவட்ட புனித அல்போன்சா திருத்தல இளையோர் நடைபயணத்தில் பங்கு தந்தை தலைமையில் 30 பேர் கலந்து கொண்டனர். ஜூலை 27 தாத்தா பாட்டி தினம் கொண்டாடப்பட்டு, திருப்பலி முதியவர்களுக்காக ஒப்பு கொடுக்கப்பட்டு சிறப்பு கை வைத்தல் ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

### லூர்து மாதா ஆலயம் சேனங்கோடு

மறைமாவட்ட புனித அல்போன்சா திருத்தல நடைபயணத்தில் இறைமக்கள் கலந்து கொண்டனர். ஆலயத்தில் நவநாளும் சிறப்பு திருப்பலி திருப்பவனியும்


நடைபெற்றது. முதியோரை ஆதரிக்கும் வண்ணமாக ஜூலை 27 தாத்தா பாட்டி தினம் கொண்டாடப்பட்டது.

### திரு இருதய ஆலயம் பள்ளிக்கோணம்



ஜூலை மூன்றாம் நாள் துக்ரானாத் திருநாள் மாலை 6.00 மணிக்கு நடந்த திருப்பலியோடு சிறப்பாக கொண்டாடப்பட்டு, அன்றைய காணிக்கை சீரோ மலபார் திருச்சபையின் வளர்ச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஜூலை 6, மறைமாவட்டத்தில் செயல்படுகின்ற நல்வாழ்வு இயக்கம் மறைமவட்ட பொறுப்பாளர்கள் அருட்சகோதரி மிஸ்ஸி மரியா, மற்றும் சகோதரி ஷைனி ஆகியோரால் எட்டு நபர் கொண்ட குழு துவங்கப்பட்டது. 12 ஆம் தேதி, மஞ்சாலுமூடு மற்றும் களியல் மறைவட்ட உறவிய பணியாளர்கள் அரை நாள் தியானத்தில் பங்கில் செயல்படுகின்ற நான்கு உறவியங்களின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். முதியோரை ஆதரிக்கும் வண்ணமாக 27ஆம் தேதி, தாத்தா பாட்டி தினம் கொண்டாடப்பட்டது.

### புனித சூசையப்பர் ஆலயம் காரோடு



புனித தோமையார் திருவிழாவை முன்னிட்டு ஜூலை 03, மாலை 5.30 மணியளவில் செபமாலையும் தொடர்ந்து சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது. 06 ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலியைத் தொடர்ந்து மறைக்கல்வி மாணவர்களின், புனித தோமையார் தின கலை நிகழ்வுகள் நடைபெற்றது. 27 ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை உலக தாத்தா

பாட்டிகள் தினம் கொண்டாடப்பட்டது. காலை சிறப்பு திருப்பலியும் அனைத்து தாத்தா பாட்டிகளுக்கு நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டது. அனைத்து நிகழ்வுகளையும் இளையோர்கள் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர்.

## சூசைபுரம்

### கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

ஜூலை மூன்றாம் நாள் துக்ரானாத் திருநாள் காலை 6.30 மணிக்கு நடந்த திருப்பலியோடு சிறப்பாக கொண்டாடப்பட்டது. தொடர்ந்து வந்த ஞாயிறன்று மறைக்கல்வி மாணவ மாணவியர் அத் திருநாளை பல்வேறு நிகழ்வுகளோடு சிறப்பித்தனர். பங்கில் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 5:30 மணிக்கு ஜெபமாலை, தொடர்ந்து திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனை நடைபெற்று வருகிறது. ஜூலை 12 ஆம் தேதி மரியாயின் சேனை இயக்கத்தினர் சார்பில் தென்காசியை நோக்கி திருத்தொண்டு திருப்பயணம் நடைபெற்றது. இதில் பங்குதந்தை அருட்பணி அஜின் ஜோஸ் அவர்களும் மரியாயின் சேனை



உறுப்பினர்களும் பங்கேற்றனர். ஜூலை 19-ல் கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் நடைபெற்ற மாதாந்திர தியானத்தில் பங்கிலிருந்து திரளான நபர்கள் பங்கேற்றனர். 26 ஆம் தேதி புனித அல்போன்சா திருத்தலம் நோக்கி நடைபெற்ற நடைபயணத்தில் பங்கு மக்கள் பக்தியுடன் கலந்து கொண்டனர். 27 ஆம் தேதி தாத்தா பாட்டிகள் தினம் பங்கில் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது. சுமார் 30க்கும் அதிகமான தாத்தா பாட்டிகள் இதில் பங்கேற்றனர். பேரக்குழந்தைகள் பரிசினை வழங்கி சிறப்பித்தனர். 30-ம் தேதி உறவிய பொறுப்பாளர்கள் கூடுகை நடைபெற்றது.

### பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்

ஜூலை 3 ஆம் நாள் புனித தேமையார் திருநாள் கொண்டாடப்பட்டது. 4 ஆம் தேதி முதல் வெள்ளிக்கிழமை திருப்பலி ஆராதனை மற்றும் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது.

### புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்



ஜூலை 01, பங்கு குடும்ப விழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 3 ஆம் தேதி அருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலியும், திருமுழுக்கு மற்றும் முதல் திருவிருந்து வழங்கப்பட்டது. நிறைவு நாளன்று பக்த இயக்கங்களின் ஆண்டு விழா நடைபெற்றது.

### தூய தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

ஜூலை 3 ஆம் தேதி தோமையார் விழாவை முன்னிட்டு காலை 6.30மணிக்கு சிறப்பு திருப்பலி நடைபெற்றது. 6 ஆம் தேதி மாலை 4.00மணிக்கு புனித தோமையார் உறவிய மக்களின் உறவியக்கூட்டமும் பொது கூட்டமும் அருட் தந்தை ஜோஸ் புரையிடகுந்நேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. 13 ஆம் தேதி திருப்பலி முடிந்தவுடன் பங்கு தந்தை தலைமையில் பங்கு பேரவை நடைபெற்றன. 21 ஆம் தேதி பங்குதந்தை மற்றும் அருட்சகோதரிகள் படுக்கை நோயாளிகளின் வீடுகளுக்கு சென்று அவர்களுக்காக ஜெபித்து நற்கருணை வழங்கப்பட்டது. 23 ஆம் தேதி, மாலை திருப்பலிக்கு பின் இளையோர் இயக்க கூட்டம் பங்குதந்தை தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆலய திருவிழாவில் இளையோரின் பங்கு குறித்து விவாதிக்கப்பட்டது. 27 ஆம் தேதி அருட்தந்தை ஜோஸ் புரையிடகுந்நேல் அவர்கள் தலைமையில் இரண்டு குழந்தைகளுக்கு திருமுழுக்கு வழங்கப்பட்டன.

### புனித வியாகப்பர் ஆலயம் மாங்கரை

ஜூலை 3 ஆம் தேதி புனித தோமையார் திருவிழாவை முன்னிட்டு மாலை 6 மணிக்கு அருட்தந்தை டோஜி அவர்களின் தலைமையில் புனித தோமையார் உறவிய மக்கள் சிறப்பித்தனர். 5 ஆம் தேதி இரண்டு பேருக்கு அருட்



தந்தை டோஜி தலைமையில் உறுதி பூசுதல் வழங்கப்பட்டன. 7 ஆம் தேதி இரண்டு பேருக்கு அருட்தந்தை அனில் ராஜ் அவர்களின் தலைமையில் முதல் திருவிருந்து மற்றும் உறுதி பூசுதலும் வழங்கப்பட்டன. 14 ஆம் தேதி பங்குதந்தை மற்றும் அருட்சகோதரிகள் படுக்கை நோயாளிகளின் வீடுகளுக்கு சென்று அவர்களுக்காக ஜெபித்து நற்கருணை வழங்கப்பட்டது. 26 ஆம் தேதி 10 பிள்ளைகளுக்கு முதல் திருவிருந்தும் 12 பிள்ளைகளுக்கு உறுதி பூசுதலும் பேரருட்தந்தை டோஜி பறம்பில் பறம்பில் அவர்களின் தலைமையில் வழங்கப்பட்டது.

### புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம், சூசைபுரம்

ஜூலை 3 ஆம் நாள் புனித தேமையார் திருநாள் கொண்டாடப்பட்டது. 04 ஆம் தேதி, திருப்பலிக்கு பின்னர் புனித அல்போன்சா கல்லூரி தாளாளர் அருட்தந்தை எபி பூவத்துமூட்டில் அவர்களின் பெயர் கொண்ட திருவிழா பங்குத்தந்தையின் தலைமையில் கேக் வெட்டி, தங்கள் வாழ்த்துகளை தெரிவித்தனர். 06 ஆம் தேதி, திருச்சபையின் தாய் பிரசீடியம் துவங்கப்பட்ட 25 வது ஆண்டு விழாவினை முன்னிட்டு அன்றைய திருப்பலியினை மரியாயின் சேனையினர் சிறப்பித்தனர். 13 ஆம் தேதி, திருப்பலிக்குப் பின்னர் திரு.எட்வின்சன் அவர்கள் மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு குறித்த அறிமுக உரையினைக் கூறி, இக்குழுவினில் பங்கேற்க அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். அன்றைய தினம் மாலை 5 மணிக்கு பங்கு தந்தையின் தலைமையில் பங்குப் பேரவை கூட்டம் நடைபெற்றது. 16 ஆம் தேதி, மாலை 5.45 மணிக்கு கார்மேல் மாதா திருவிழா திருப்பலி மற்றும் ஜெபமாலை பவனி நடத்தப்பட்டது. இறுதியாக பங்குத்தந்தை அவர்கள் அனைவருக்கும் உத்தரியம் வழங்கினார்கள். 18 ஆம் தேதி, திருப்பலி முடிந்தவுடன் 9 நாட்கள் புனித அல்போன்சா நவநாள் ஜெபம் சொல்லி ஜெபிக்கப்பட்டது.

23 ஆம் தேதி, மாலை 5 மணிக்கு எம் ஆலயத்திற்கு வருகை தந்த, பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட SABS துறவற சபையின் தமிழ்நாடு மாகாண தலைவி அருட்சகோதரி றோஸ் மார்ட்டின் அவர்களின் சகோதரர் மேதகு ஆயர் ஜோஸ் செபாஸ்டின் அவர்களுக்கும்

நமது மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களுக்கும் சிறப்பான முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் மேதகு ஆயர்கள் இருவரும் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார்கள். 24 ஆம் தேதி, மாலை 4.30 மணிக்கு மாதர்ஜோதிஸ் பொறுப்பாளர்கள் கூட்டமும் 5.00 மணிக்கு உறவியத் தலைவர்கள் கூட்டமும் பங்குத்தந்தையின் தலைமையில் நடைபெற்றது. 26 ஆம் தேதி, புனித அல்போன்சா திருத்தலம் நோக்கிய நடைபயணத்தில் ஏராளமான பங்கு மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். 27 ஆம் தேதி, திருப்பலி முடிந்தவுடன் பங்கு பொதுமன்றம் நடைபெற்றது.

## மஞ்சாலுமூடு

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் மஞ்சாலுமூடு

ஜூலை 3 தேதி, புனித தோமையர் தினம் மாலையில் திருப்பலியும், சிலுவை முத்தம் செய்தல் தொடர்ந்து உறவியங்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் குருக்கள் மற்றும் கன்னியரை சபைக்கு தந்த பெற்றோர்களை கௌரவித்தல், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு பரிசு வழங்குதல் மற்றும் பல்வேறு நிகழ்வுகளில் சாதனை படைத்தவர்களை பாராட்டுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. ஜூலை 12 மஞ்சாலுமூடு மற்றும் களியல் மறைவட்டங்களில் உள்ள உறவிய பொறுப்பாளர்களுக்கு காலை 9-30 முதல் மதியம் 1-30 வரை தியானம் நடைபெற்றது. ஜூலை 20 ஆம் தேதி, மறைமாவட்ட வின்செந்தியர் ஆண்டு விழா காலை 9-30 க்கு திருப்பலி, தொடர்ந்து ஆயர் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பித்து மதிய உணவுடன் நிறைவு பெற்றது. ஜூலை 20 புனித அல்போன்சா நவநாள் 9 நாட்கள் திருப்பலியுடன் நடைபெற்றது. கடைசி நாளில் பவனி மற்றும் நேர்ச்சை உணவும் வழங்கப்பட்டது. ஜூலை 25 ஆம் தேதி, புனித யாக்கோபின் திருவிழாவும், ஜூலை 27 திருப்பலிக்கு பின் பங்கு தந்தையின் பெயர் கொண்ட திருவிழாவும் கொண்டாடப்பட்டது. பின்னர் திருவிழா பற்றி முடிவெடுக்க பொது மன்றம் நடைபெற்று, இதில் திருவிழா குழுக்களின் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஆகஸ்ட் மாதம் 17 ஆம் தேதி நெய்யாற்றின்கரை நிம்ஸ் மருத்துவமனையின் மருத்துவ முகாம் நடைபெறுவதை ஒட்டி நிம்ஸ் - ன் PRO பங்கெடுத்த ஆலோசனை கூட்டம் ஜூலை 29 இல் நடைபெற்றது.

### புனித தோமையார் ஆலயம் முழுக்கோடு

பங்கு குடும்ப விழா ஜூன் 26 முதல் ஜூலை 06 வரை கொண்டாடப்பட்டது. முதல் மூன்று நாட்கள் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. 29ஆம்



தேதி பங்குத்தந்தை சந்தோஷ் கையாலப்பறம்பில் CMI அவர்கள் திருகொடி ஏற்றி குடும்ப விழாவினை தொடங்கி வைத்தார்கள். ஜூலை 01, ஆயர் அவர்கள் வருகை தந்து திருப்பலி நிறைவேற்றி, 14 மாணவ மாணவிகளுக்கு முதல் திருவிருந்து வழங்கப்பட்டது. இறுதி நாளில் தேர்பவனி மற்றும் பங்குத்தந்தை அவர்கள் திருகொடி இறக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

## படந்தாலுமூடு

### புனித மரிய கொரற்றி ஆலயம் அதங்கோடு

**அதங்கோடு தூய மரிய கொரற்றி ஆலயத்தின் 45-வது குடும்ப விழா 2025 ஜூலை மாதம் 2 முதல் 6 ஆம் நாள் வரை 5 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. ஜூலை 2, மாலை 6.30 மணிக்கு பங்குத்தந்தை அருட்தந்தை ஆன்றணி மாடப்புரய்க்கல் அவர்கள் திருக்கொடியேற்றினார். தினமும் செபமாலை, திருப்பலி மற்றும் அன்பின் விருந்து நடைபெற்றது. முதல் இரு நாட்கள் நற்செய்தி பெருவிழாவும், மூன்றாம் நாளன்று மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் தலைமையில் இறந்தோர் நினைவு நாளும், நான்காம் நாளன்று திருப்பவனியும் நடைபெற்றன. நிறைவு நாளன்று பாதுகாவலியின் திருவிழா காலை 10 மணிக்கு இராசைத் திருப்பலி, அன்பின் விருந்து மற்றும் திருக்கொடி இறக்குதலும் நடைபெற்றன. மாலை 7:00 மணிக்கு மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும் சிறப்பிக்கப்பட்டது. விழா நிகழ்வுகளை திருவிழாக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.**

### மார்ட்டின் டி போரஸ் ஆலயம், கழுவன்திட்டை

ஜூலை 3 ஆம் தேதி, துக்ரானா திருநாள் கொண்டாடப்பட்டது. 13 ஆம் தேதி, பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது. 26 ஆம் தேதி, புனித அல்போன்சா திருத்தலத்தை நோக்கிய நடை பயணத்தில் பங்கு மக்கள் கலந்து கொண்டார்கள். 27 ஆம் தேதி, திருப்பலி பங்கிலுள்ள அனைத்து தாத்தா பாட்டிகளுக்கும் ஒப்பு கொடுக்கப்பட்டது.

### திரு இருதய மறைவட்ட ஆலயம் படந்தாலுமூடு

ஜூலை 3 ஆம் தேதி, துக்ரானா திருநாள் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து பங்குதந்தை பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்களின் பெயர் கொண்ட புனிதரின் விழா கொண்டாடப்பட்டது. 6 ஆம் தேதி, துக்ரான திருவிழா மறைக்கல்வி மாணவர்களால் கலை நிகழ்வுகளோடு கொண்டாடினார்கள். 26 ஆம் தேதி, புனித அல்போன்ஸா திருத்தலத்தை நோக்கிய நடைபயணத்தில் சுமார் 80 பேர் கலந்து கொண்டார்கள். 27 ஆம் தேதி, திருப்பலி பங்கிலுள்ள அனைத்து தாத்தா பாட்டிகளுக்கும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

## நித்திரவிளை மறைவட்டம்

### புனித அந்தோனியார் ஆலயம் – வயலங்கரை



ஜூலை 3 ஆம் நாள் புனித தேமையார் திருநாள் கொண்டாடப்பட்டது. 6 ம் தேதி, திருப்பலி நிறைவில் புதிதாக மறைக்கல்வி வகுப்புக்கு வருகை தந்த மாணவர்களை வரவேற்று வாழ்த்து கூறி மலர் கொத்து வழங்கி சிறப்பித்தனர். பின் மறைக்கல்வி மாணவியர் சார்பாக தோமையார் தினம் கொண்டாடி சிறப்பித்தனர்.

### புனித சவேரியார் ஆலயம் வாறுதட்டு

ஜூலை 3 ஆம் நாள் புனித தேமையார் திருநாள் கொண்டாடப்பட்டது. 06 ஆம் தேதி, மூன்றாம் உறவிய மக்கள் தங்கள் உறவியப் பாதுகாவலராம் புனித தோமையாரின் திருவிழா திருப்பலியை காணிக்கை பவனியுடன் சிறப்பித்தார்கள். தெடர்ந்து மறைக்கல்வி சார்பாக கலைநிகழ்ச்சிகளுடன் சிறப்பாக

கொண்டாடப்பட்டது. அன்று மாலை புனித தோமையார் உறவியத்தின் ஆண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. 13 ஆம் தேதி, மாலை 4 மணிக்கு பங்கு பேரவைக் கூட்டம் நடைபெற்றது. 20 ஆம் தேதி, படந்தாலுமூடு பங்கில் வைத்து நடைபெற்ற பங்கு மிஷன் லீக் இயக்கத்தின் பொதுமன்றத்தில் இல் மிஷன் லீக் ஊக்குவிப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். மஞ்சாலுமூடு பங்கில் வைத்து நடைபெற்ற வின்சென்ட் தே பவுல் இயக்க ஆண்டு விழாவில் எம் பங்கின் சார்பாக இவ்வியக்கத்திலிருந்து 13 பேர் கலந்து கொண்டனர். 21 முதல் 28 ஆம் தேதி வரை, புனித அல்போன்சம்மாவின் நினைவு நாளை முன்னிட்டு மாலை 6.30 மணிக்கு திருப்பலியும், அதனைத் தொடர்ந்து நவநாள் ஜெபமும் நடைபெற்றது. 27ஆம் தேதி, 1 - ஆம் உறவிய மக்கள் தங்கள் உறவியப் பாதுகாவலியாம் புனித அல்போன்சம்மாவின் திருவிழா திருப்பலியினை காணிக்கைப் பவனியுடன் சிறப்பித்தார்கள். மாலை 5.30 மணிக்கு உறவிய கூட்டமும், உறவிய ஆண்டு விழா பொதுக்கூட்டமும் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பங்கு தந்தை மற்றும் அருட்சகோதரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தின் இடை இடையே உறவிய மக்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### ▶ புனித ஜார்ஜியார் திருத்தலம் முன்சிறை

ஜூலை மூன்றாம் தேதி புனித தோமையார் திருநாள் சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுத்து ஜெபிக்கப்பட்டது. அன்றைய காலை 6 மணி முதல் மாலை



6 மணி வரை தொடர் ஜெபமாலை வழிபாடும், நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. 6 ஆம் தேதி, துக்ரான திருவிழா மறைக்கல்வி மாணவர்கள் கலை நிகழ்வுகளோடு சிறப்பித்தார்கள்.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி சுனிதா**

## வரவிருக்கும் நிகழ்வுகள்

**ஆகஸ்ட் 18–29 – சீரோ மலபார் ஆயர் பேரவை**

**ஆகஸ்ட் 31 – கல்லுவிளையில் வின்சென்ட் டி பால் கிறிஸ்து ஜூபிலி விழா**

## MONTHLY AGENDA – AUGUST2025

| DATE | DAY | EVENTS |
|---|---|---|
| 1 | Fri | VC: Adoration for Vocation (Soosaipuram Forane) SINAI: Retreat at Vattakottai |
| 2 | Sat | MJ: Awareness programme |
| 3 | Sun | St. Alphonsa Feast day |
| 4 | Mon | KKSSS: Awareness on World Breast Feeding |
| 5 | Tue | SINAI: Intercessory Prayer |
| 6 | Wed | KKSSS: Rain harvesting Awareness Programme |
| 8 | Fri | FA: Marriage Preparation Course |
| 9 | Sat | Alphonsa Academy Inauguration @ Nagercoil Matrujyothis Inauguration @ Kalluvilai<br>CAT: HM Meet at Kalluvilai KII: Animators meeting at Kalluvilai SINAI: Evening Retreat at Malaicode FA: Marriage Preparation Course TM: Mission Meet |
| 10 | Sun | Catechism Annual Day @ Kalluvilai CAT: Basic training Programme for Catechists: Class V at Padanthalumoodu (Batch:VIII) KKSSS: Gatekeeping Programme for Parish Council and Pious Association leaders at Palappallam LC: Forane Leaders Meeting SMYM: Thuckalay Pilankalai Forane Unit Executive Meeting URM: Padanthalumoodu Forane Leaders Meeting FA: Marriage Preparation Course SVP: AC Meeting CML: Quiz Competition |

| | | |
|---|---|---|
| 11 | Mon | CML: Commemoration of Kunjettan in group meeting EIRD: Kanyakumari United Christian Council |
| 12 | Tue | SINAI: Intercessory Prayer |
| 15 | Fri | KKSSS: Grama Sabha at Vayalinkarai SMYM: Youth Fest MJ: Quiz Book releasing ASc: Independence Day celebration |
| 16 | Sat | HC: Drug Addiction and Social Media Awareness at Chenamcode FA: Unmarried Youth Meet MS: Padanthalumoodu Curia Trainin |
| 17 | Sun | CML: Read the short history of the feast of the assumption of our lady in group meeting LC: Forane Leaders Meeting at Kalluvilai MJ: Director's visit to Thettiyode |
| 18 | Mon | EIRD: Regional United Christian |
| 19 | Tue | SINAI: Intercessory Prayer |
| 21 | Thu | ET: Mission Meet |
| 23 | Sat | SINAI: One day Retreat at Kalluvilai MJ: Awareness programme URVM: Retreat for Arukani Forane parish Animators, Organizers and Leaders |
| 24 | Sun | CAT: Basic training Programme for Catechists: Class VI at Padanthalumoodu (Batch:VIII) CML: Prayer and commemoration of St. Euphrasia in group meeting KKSSS: Gatekeeping Programme for Parish Council and Pious Association leaders at Munchirai SMYM: Soosaipuram Forane Unit Executive Meeting URM: Arukani Forane Animators' Meeting MJ: Director's visit to Marappady |

| | | |
|---|---|---|
| 26 | Tue | SINAI: Intercessory Prayer |
| 27 | Wed | CAT: Seminar for Class X and XI at Kalluvilai KKSSS: Educare Class |
| 28 | Thu | KKSSS: SHG Onam Celebration |
| 29 | Fri | MIG: Online Rosary |
| 30 | Sat | KII: Forane level monthly activity MJ: One hour class URVM: Retreat for Soosaipuram-Thuckalai Pilankalai parish Animators, Organizers |

FR.THOMAS POWATHUPARAMPIL, PROTOSYNCELLUS

| BIRTHDAY OF REV. FATHERS - AUGUST - 2025 | |
|---|---|
| FR. JOSHY THEVALAKKARA CMI | 01 |
| FR. SOORAJ KADAVIL MCBS | 01 |
| FR. VINOD KANAKALIL | 04 |
| FR. SHAN AYALLOOR | 08 |
| FR. RAJESH VAYALUMKAL MCBS | 09 |
| FR. PRINCE CHERIPPANATTU | 10 |
| FR. GEORGE KANDATHIL | 14 |
| FR. ROBINS KUZHIKODIL | 15 |
| FR. MATHEW AREKALAM CMI | 19 |
| FR. VARGHESE KOTTOOR CMI | 25 |
| FR. VIVEK KALARITHARA MCBS | 29 |

| BISHOP'S ENGAGEMENTS - AUGUST 2025 | | | |
|---|---|---|---|
| DATE | DAY | TIME | EVENTS |
| 1 | Fri | 03.30 pm | Nagercoil: Protest for the Religious Sisters |
| 2 | Sat | 04.00 pm | Kottayam: Jubilee |
| 3 | Sun | 08.30 am | Nagercoil: St. Alphonsa Feast Day Qurbana |
| 4 | Mon | 09.00 am<br>04.30 pm | Minor Seminary: Vianney Day<br>Kalkikulam: Vespers |
| 5 | Tue | | Bishop's House |
| 6 | Wed | | Bishop's House |
| 7 | Thu | | Bishop's House |
| 8 | Fri | 09.30 am | Bishop's House: Curia meeting |
| 9 | Sat | 10.00 am<br>02.30 pm | Nagercoil: Alphonsa Academy Inauguration<br>Kalluvilai: Matrujyothis Inauguration |
| 10 | Sun | 10.00 am<br>02.00 pm | Nithiravilai: Feast Day Qurbana<br>Kalluvilai: Catechism Annual Day |
| 11 | Mon | | >> Changancherry >> Trichy |
| 12- 13 | Tue -Wed | | Trichy: Health Commission TOT Meeting |
| 14 | Thu | | Changanaserry: Bishop Kocherry' Jubilee |
| 15 | Fri | 11.00 pm<br>06.00 pm | Puthukadai: Show room Blessing |
| 16 | Sat | 04.00 pm | Soosaipuram: Mar Kurialacherry celebration |
| 17-29 | Sun - Fri | | Kakkanad: Syro Malabar Bishops' Synod |
| 30 | Sat | | Champakulam: Marriage Holy Qurbana |
| 31 | Sun | | Bishop's House |

**FR. LIJU MATHEW, BISHOP'S SECRETARY**



01-08-2025

Protest Rally against the Imprisonment of Nuns at Chhattisgarh



20-07-2025

St.Vincent De Paul Anniversary at Manjalumoodu



20-07-2025

CML General Body Meeting Padanthalumoodu

## ST. ALPHONSA SHRINE FEAST AT NAGERCOIL







## Reception to the Nadaipayanam at Nagercoil

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay Published by: Media Department of the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175 Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570